# மக்களவையில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி உரை!

முதல் பக்கத் தொடர்ச்சி

முழுமையாக நியமிக்கிறது. இதில் மாநிலப் பிரதிநிதிகளுக்கு வாக்களிக்கக் கூட அதிகாரம் இல்லை. வெறும் பார்வையாளர்களாக மட்டுமே இருக்க முடியும்.

மேலும், இந்த ஆணையத்தின் முடிவை எந்த நீதிமன்றத்திலும் கேள்வி கேட்க முடியாது என்பது அச்சமளிக்கிறது. அரசியலமைப்பின் 368வது பிரிவின்படி, மாநிலப் பிரதிநிதித்துவத்தைப் பாதிக்கும் சட்டங்களுக்குப் பாதி மாநிலங்களின் ஒப்புதல் தேவை. இந்த மசோதா நியாயமானது என்று அரசுக்கு நம்பிக்கை இருந்தால், ஏன் தமிழ்நாடு, கேரளா அல்லது கர்நாடக சட்டமன்றங்களின் முன் இதை வைக்கக்கூடாது? நீங்கள் உண்மையிலேயே ‘கூட்டுறவுக் கூட்டாட்சியை’ நம்பினால், ஏன் மாநில சட்டமன்றங்களை விட்டு ஒடுகிறீர்கள்? முதலமைச்சர்களிடம் ஆலோசனைக் கூட்டத்தைக் கூட நீங்கள் நடத்தவில்லையே?

### பெண்களுக்கு இடஒதுக்கீடு என ஒன்றிய அரசு நடத்தும் அரசியல் நாடகம்!

பெண்கள் இடஒதுக்கீட்டை 2021 கணக்கெடுப்பிற்குப் பின் அமல்படுத்துவோம் என்று கூறிவிட்டு, இன்று வரை கணக்கெடுப்பை நடத்தாமல் 2011 தரவுகளைப் பயன்படுத்தத் துடிப்பது ஏன்? கடந்த பத்து ஆண்டுகளாக மாநில முதலமைச்சர்களின் கோரிக்கைகளை மதிக்காத இந்த அரசுக்கு, தேர்தல் நேரத்தில் மட்டும் இவ்வளவு அவசரம் வருவது வெறும் அரசியல் நாடகம். ஒரு கணக்கெடுப்பைக் கூட நடத்த முடியாத உங்கள் தோல்வியையே அரசியல் ஆதாயமாக மாற்றப் பார்க்கிறீர்கள்.

இது அரசியலமைப்புச் சீர்திருத்தம் அல்ல, தேர்தலுக்கான ஒரு தந்திரம். தொகுதி மறுவரையறையுடன் பெண்கள் இடஒதுக்கீட்டை இணைப்பது ஒரு பொறி. தொகுதி மறுவரையறையை எதிர்த்தால் எங்களைப் பெண்களுக்கு எதிரானவர்கள் எனக் காட்ட பா.ஜ.க. முயல்கிறது. பெண்களைத் தேர்தல் கேடயமாகப் பயன்படுத்துகிறது.

உங்களுக்கு உண்மையில் அக்கறை இருந்தால், தொகுதி மறுவரையறை நிபந்தனையை நீக்கிவிட்டு 2029லேயே இடஒதுக்கீட்டை வழங்கலாமே? கையில் இருக்கும் ரொட்டித் துண்டை தராமல், எதிர்காலத்தில் பெரிய கேக் தருவோம் எனச் சொல்வது பெண்களை ஏமாற்றும் செயலாகும்.

அரசியலமைப்புத் திருத்தங்களுக்கு 2/3 பெரும்பான்மை தேவை என்பது, எந்தவொரு தனிப்பட்ட பிராந்தியமும் மற்றவர்களின் ஒப்புதலின்றி விதிகளை மாற்றக் கூடாது என்பதற்காகவே உருவாக்கப்பட்டது. ஆனால், இடங்களின் எண்ணிக்கையை 850 ஆக

> தமிழ்நாடு முதலமைச்சர் இந்த அநீதியை எதிர்க்க அனைத்துக் கட்சிக் குழுவை அமைத்துள்ளார். மாநிலங்களுடன் கலந்தாலோசிக்காமல் இந்த மசோதாவை நிறைவேற்றக் கூடாது என்ற கோரிக்கையைப் பிரதமர் ஏற்கவில்லை. மாநிலங்கள் ஒன்றிய அரசின் ஏஜெண்டுகள் அல்ல, அவை சுதந்திரமான அரசியலமைப்பு அங்கங்கள் என்று உச்சநீதிமன்றமே கூறியுள்ளது.
>
> திமுக எதிர்ப்பிற்காக எதிர்க்கவில்லை. தற்போதைய 543 இடங்களிலேயே பெண்கள் இடஒதுக்கீட்டை உடனடியாக அமல்படுத்தி னால் நாங்கள் ஆதரிப்போம். 25 ஆண்டுகாலத் திட்டத்தை 48 மணி நேரத்தில் தீர்மானிக்காமல், மசோதாவைத் திரும்பப் பெற்று நாடாளுமன்றக் கூட்டுக் குழுவிடம் ஒப்படையுங்கள்.

உயர்த்தினால், வட மாநிலங்கள் மற்றும் பாஜக ஆளும் மாநிலங்களின் பலம் மட்டுமே 400 இடங்களைத் தாண்டிவிடும்.

### தென்மாநிலங்களின் அரசியல் சட்டத்தைத் திருத்த போடும் தந்திரம்!

இதன் மூலம், தென்னிந்தியா மற்றும் வடகிழக்கு மாநிலங்களின் ஆதரவே இல்லாமல் அரசியலமைப்பைத் திருத்தும் அதிகாரம் உங்களுக்குக் கிடைத்துவிடும். தென்னிந்திய மாநிலங்களின் கூட்டுப் பேர வலிமையைக் குறைத்து, உங்கள் கொள்கைகளைத் திணிப்பதே இந்தத் திட்டத்தின் உண்மையான நோக்கம்.

குடியரசுத் தலைவர் தேர்தலிலும் மக்கள் தொகை அடிப்படையில் எம்.எல்.ஏக்களின் வாக்கு மதிப்பு மாறுவது, கூட்டாட்சி சமநிலையைப் பாதிக்கும். இந்த மசோதா மிகவும் குழப்பமானது. 2011 கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் இடங்கள் 32ஆகக் குறையுமா, அல்லது இடங்கள் அதிகரிக்கப்பட்டால் 48 அல்லது 59 இடங்கள் கிடைக்குமா என்பதில் தெளிவு இல்லை. அவையில் அளிக்கப்படும் வாக்குறுதிகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்படுவதில்லை என்பதால், இந்த அரசின் வார்த்தைகளை எங்களால் நம்ப முடியவில்லை.

### அநீதிக்கு எதிராக அனைத்துக் கட்சி குழுவை அமைத்துள்ளார் தமிழ்நாடு முதல்வர்!

தமிழ்நாடு முதலமைச்சர் இந்த அநீதியை எதிர்க்க அனைத்துக் கட்சிக் குழுவை அமைத்துள்ளார். மாநிலங்களுடன் கலந்தாலோசிக்காமல் இந்த மசோதாவை நிறைவேற்றக் கூடாது என்ற கோரிக்கையைப் பிரதமர் ஏற்கவில்லை. மாநிலங்கள் ஒன்றிய அரசின் ஏஜெண்டுகள் அல்ல, அவை சுதந்திரமான அரசியலமைப்பு அங்கங்கள் என்று உச்சநீதிமன்றமே கூறியுள்ளது.

தி.மு.க. எதிர்ப்பிற்காக எதிர்க்கவில்லை. தற்போதைய 543 இடங்களிலேயே பெண்கள் இடஒதுக்கீட்டை உடனடியாக அமல்படுத்தினால் நாங்கள் ஆதரிப்போம். 25 ஆண்டுகாலத் திட்டத்தை 48 மணி நேரத்தில் தீர்மானிக்காமல், மசோதாவைத் திரும்பப் பெற்று நாடாளுமன்றக் கூட்டுக் குழுவிடம் ஒப்படையுங்கள்.

கருப்பு என்பது எங்களின் அறிவுசார் தலைவர் பெரியார் கற்பித்த சுயமரியாதைப் போராட்டத்தின் அடையாளம். மாநிலங்களைச் சமமான கூட்டாளிகளாகக் கருதிய அண்ணா, கலைஞர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆகியோரின் பெயரால், மாநிலங்களின் உரிமையைப் பறிக்கும் இந்த மசோதாவை நாங்கள் எதிர்க்கிறோம்.

இவ்வாறு நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் மக்களவையில் கழகத்தின் கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தார்.



மதுரை பழங்காநத்தத்தில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் காங்கிரஸ் பேரியக்க மூத்த தலைவர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் கிழக்கு தொகுதி கழக வேட்பாளர் வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மேற்கு தொகுதி கழக வேட்பாளர் வழக்கறிஞர் ரகு பாலாஜி ஆகியோரை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள், கூட்டணி கட்சியினர், பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

# எல்லா மக்களையும் பாதுகாக்கின்ற ஆட்சி தி.மு.க. ஆட்சி !

## செஞ்சி தொகுதியில் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி பேச்சு!



செஞ்சி, ஏப் 18-

செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் பரபரப்பு உச்சத்தை எட்டியுள்ள நிலையில், திராவிடர் கழகத்தின் தலைவர் கி. வீரமணி, செஞ்சி தொகுதி திமுக வேட்பாளர் செஞ்சிமஸ்தானை ஆதரித்து நடத்திய பிரச்சாரம் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது.

நகரின் முக்கிய பகுதியான செஞ்சி விழுப்புரம் சாலையில் நடைபெற்ற இந்த வாக்கு சேகரிப்பு பிரச்சாரத்தில் மக்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டுதிமுக வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏவிற்கு வரவேற்பு அளித்தனர்.

இளைஞர்கள், பெண்கள் மற்றும் முதியோர் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் கலந்துகொண்டனர்.

பிரச்சாரத்தின் போது உரையாற்றிய கி.வீரமணி, சமூகநீதி, மாநில உரிமைகள் மற்றும் அரசியல் நிலைப்பாடுகள் குறித்து பேசினார். மேலும், தமிழ் நாட்டையும் தமிழ்நாட்டு மக்களையும் வஞ்சித்து பாஜக - அதிமுக கூட்டணி செய்யும் துரோகத்தையும் எடுத்துரைத்து மக்களின் ஆதரவை திரட்ட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

செஞ்சி தொகுதி திமுக வேட்பாளர் செஞ்சிமஸ்தான் மக்களின் நம்பிக்கைக்கு இணையாக செயல்பட்டு, தொகுதி வளர்ச்சிக்காகவும் மக்களின் வளர்ச்சிக்காகவும் பாடுபடுவதாக தெரிவித்த அவர்திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கொள்கை கூட்டணி என்றும் எல்லா மக்களையும் பாதுகாக்கின்ற ஆட்சி தான்திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் உரிமைக்காக கருப்பு கொடி ஏற்றினோம் சிறுபான்மை மக்கள் நாட்டில் வாழ வேண்டும் ஆனால் அவர்களுடைய வாழ்க்கை மிகப் பெரிய கொடுமைக்கு உரிய ஆட்சியாக ஒன்றிய ஆட்சி உள்ளது. இன்றைக்கு குடியுரிமையை பதித்துக் கொண்டனர் முழுக்க முழுக்க மத கலவரத்தை உருவாக்க வேண்டும் என்றநோக்கத்தோடு திருப்ப ரங்குன்றத்தைபாஜகவினர் கையில் எடுத்துள்ளனர்.

பாஜக தேர்தல் அறிக்கையில் சிறுபான்மை இன மக்களுக்கு ஒரு அறிக்கை கூட இல்லை ஆனால் சிறு பான்மையின மக்களுக்கு எல்லா உரிமைகளை பாதுகாக்கின்ற ஆட்சி ஸ்டாலின் ஆட்சி ஆர்.எஸ்.எஸ் கொள்கை ஜாதியை காப்பாற்ற வேண்டும் அரசியலில் மாநிலங்களே இருக்கக் கூடாது என்ற நிலையை உருவாக்க வேண்டும் மகளிர்களுக்கு இட ஒதுக்கீடு என்ற ஒரு பெயரில் முக மூடி போட்டுக் கொண்டு அவசரம் என்று கூறுகின்றனர்.

தமிழ்நாடு உள்ளிட்ட மேற்கு வங்கத்தில் 23ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில் பிரச்சாரம் நடைபெற்று வருகிறது இதை பற்றி கவலைப்படாமல் ஆர்எஸ்எஸ் ,பிஜேபி மோடி அரசு திடீரென தொகுதி மறு வரையறை என்ற சூழ்ச்சியை உண்டாக்கி உள்ளனர் அதனால் தான் கருப்புக் கொடி ஏற்றி சட்ட மசோதா நகலை எரித்துள்ளோம்இபிஎஸ் தலைமையிலான அதிமுக இன்றைக்கு லேடியாகவும் மோடியாகவும் இல்லாமல் ஓடியாக உள்ளது. சாதனையின் மேல் சாதனை செய்து கொண்டு இருப்பவர்தான் முதலமைச்சர் ஸ்டாலின்.4 தேதி ஸ்டாலின் ஆட்சிக்கு வருவது உறுதி செஞ்சி மஸ்தான் சட்டமன்றம் செல்வது உறுதி அப்போது மகளிர் உரிமைத் தொகை 1000 அல்ல 2000 கிடைப்பது உறுதி டெல்லியில் இருந்து வரக்கூடியவர்கள் அவர்களுக்கு அடிமை சாசனம் எழுதிக் கொடுத்தவர்கள் உங்களுக்கு வரக்கூடிய 1000 ரூபாயை தடுக்க நீதி மன்றம் சென்றனர் ஆனால் அதனை முறியடித்து 2000 அல்ல கோடை உதவித் தொகை என்று 3000 ரூபாயையும் சேர்த்து கொடுத்தது தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

இது மட்டுமல்ல திமுக தேர்தல் அறிக்கையில் கூறியுள்ள அனைத்து திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு வாக்காளர்களாகிய நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்திற்கு பெருவறையான வாக்குகள் அளித்து செஞ்சி தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் அவர் கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் முன்னாள் மத்திய இணை அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், கூட்டணி கட்சி நிர்வாகிகள் ரங்க பூபதி, தயாநிதி, சிவா, பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,திராவிடர் கழக நிர்வாகிகள், திமுக, தோழமைக் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோ கலந்து கொண்டனர்.

மேல்மலையனூர் ஒன்றியத்தில் வாக்கு சேகரிப்பு:

முன்னதாக செஞ்சி தொகுதி திமுக வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் தலைமையில் ஒன்றிய செயலாளர்கள் ,சாந்தி சுப்பிரமணியன், நாராயணமூர்த்தி ஆகியோர் முன்னிலையில்

மேல்மலையனூர் மேற்கு ஒன்றியம் எய்யில், மேல்செவளாம்பாடி, நந்திரபுரம், ஆன பள்ளம், தேப்பிரம்பட்டு, பெரியநொளம்பை, சின்ன நொளம்பை பரிதிபுரம்ஆகிய கிராமங்களில் வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்குசேகரித்தார்.

வாக்கு சேகரிக்க சென்ற திமுக வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ விற்கு அனைத்து இடங்களிலும் பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

‘நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன்காங்கிரஸ் கட்சியின்நிர்வாகிகள் மண்ணாங்கட்டி அரி, சரவணன், சண்முகம், மதிமுக நிர்வாகிகள் பின்னலூர்ஏழுமலை, தேமுதிக நிர்வாகிகள் சின்னதுரை, செங்குட்டுவன், விசிக மாவட்ட செயலாளர் சிவா, மழைமேனி பாண்டியன், திமுகஒன்றிய நிர்வாகிகள்உதயகுமார், ரவிச்சந்திரன், அர்ஷத், தாஹிராஅப்துல் வகாப்,சரவணன், எஸ். பி .சம்பத், சக்தி,தமிழரசி பாண்டியன், பெருமாள்,காந்திமதி,ஒன்றியஇளைஞரின் அமைப்பாளர்மணிகண்டன், துணை அமைப்பாளர் சக்திவாசன்,ஒன்றிய ஆதிதிராவிடர் நல அணி அமைப்பாளர் சத்யராஜ், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம், திருச்சுழித் தொகுதி, நரிக்குடி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மக்களை நேரில் சந்தித்து திருச்சுழி தி.மு.க. வேட்பாளர் தங்கம் தென்னரசு வாக்குகள் சேகரித்தார்.



செங்கம் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் மு.பெ. கிரியை ஆதரித்து அமைச்சர் எ.வ.வேலு பிரச்சாரம் செய்தார். உடன் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.




ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வரும் தொகுதி மறு வரையறை மசோதாவை திரும்பப் பெற வலியுறுத்தி தூத்துக்குடி வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் தூத்துக்குடி கலைஞர் அரங்கின் முன்பு வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் பெ.கீதா ஜீவன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நிகழ்வில் அகில ஏ.பி.சி.வி.சண்முகம், ஜெகன் பெரியசாமி, ஆனந்த சேகரன், ராஜ் மோகன் செல்வின், துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ், கோட்டூர் ராஜா, சுரேஷ், அபிராமிநந்தன் மற்றும் கூட்டணி கட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.